# கொடைக்கானல் நகராட்சி

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் விதி 2(1)ன் கீழ் 24.06.2022ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 12.00 மணிக்கு நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர்மன்றத் தலைவர்,
நாள். 21.06.2022 கொடைக்கானல் நகராட்சி.

**பொருள் எண். 1)**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை திறம்பட செயல்படுத்த போதிய நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதி மற்றும் மன்ற அனுமதியுடன் நகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்தரவு ந.க.எண்.215/2020/எச்.1, நாள்.11.02.2021–ன் படி 96 தூய்மைப் பணியாளர்களை GESM Environment Service, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது அரசின் கொள்கைப்படி அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரே மாதிரியான பொது விலை விகிதத்தில் தூய்மைப் பணியாளர்களை நியமனம் செய்ய அறிவுறுத்தியதன் பேரில் கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ந.க.எண்.3140/2016/எச்.1, நாள்.16.08.2021–ன்படி கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற வேண்டி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இது நாள் வரை நிர்வாக அனுமதி பெறப்படாத நிலையில் மேற்கண்ட நிறுவனத்தின் பணிக்காலம் 10.05.2022 உடன் முடிவடைவதால் மேற்கண்ட, நகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்தரவு மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதே விலை விகிதத்தில் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள அனுமதி வேண்டி GESM நிறுவனம் மூலம் கடிதம் வரப்பட்டதை தொடர்ந்து தற்போது சீசன் காலம் தொடங்கி சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால் பொது சுகாதாரத்தின் அவசியம் கருதியும், நிர்வாக அனுமதி பெறப்படும் காலம் வரை டெண்டர் கோரி பணியினை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளதாலும், GESM Environment Service, Chennai என்ற நிறுவனத்திற்கு பணி கால நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 96 தூய்மைப் பணியாளர்களை, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கி பணி தொடங்கும் காலம் வரை பொது சுகாதாரத்தின் அவசியம் கருதி GESM Environment Service, Chennai நிறுவனத்திற்கு பணி கால நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.215/2020/எச்.1)

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **64, நாள்.24.06.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண்.2**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் 30 எண்ணிக்கையிலான பொது மற்றும் சமுதாயக் கழிப்பறைகளை தொடர்ந்து சீரிய முறையில் பராமரிக்க போதிய நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் சேவை அடிப்படையில் தூய்மை பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்தரவு ந.க.எண்.3202/2018/எச்.1, நாள்.26.02.2021–ன் படி GESM Environment Service, Chennai என்ற நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது அரசின் கொள்கைப்படி அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரே மாதிரியான பொது விலை விகிதத்தில் தூய்மைப் பணியாளர்களை நியமனம் செய்ய அறிவுறுத்தியதன் பேரில் கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ந.க.எண்.3140/2016/எச்.1, நாள்.16.08.2021–ன்படி கருத்துரு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் நிர்வாக அனுமதி இது நாள் வரை பெறப்படாத நிலையில் மேற்கண்ட நிறுவனத்தின் பணிக்காலம் 31.05.2022 உடன் முடிவடைவதால் மேற்கண்ட, நகராட்சி ஆணையாளர் அவர்களின் உத்தரவு மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு உத்தரவு வழங்கிய விலை விகிதத்திலேயே பணியினை தொடர்ந்து மேற்கொள்ள அனுமதி வேண்டி GESM நிறுவனம் மூலம் கடிதம் வரப்பட்டுள்ளதை தொடர்ந்து தற்போது சீசன் காலம் தொடங்கி சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதால் பொது சுகாதாரத்தின் அவசியம் கருதியும், நிர்வாக அனுமதி பெறப்படும் காலம் வரை டெண்டர் கோரி பணியினை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளதாலும், GESM Environment Service, Chennai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 30 எண்ணிக்கையிலான பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளை பணியினை தொடர்ந்து மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கி பணி தொடங்கும் காலம் வரை GESM Environment Service, Chennai நிறுவனத்திற்கு பணி உத்தரவு கால நீட்டிப்பு வழங்கி தொடர்ந்து பணி கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3202/2018/எச்.1)

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **65, நாள்.24.06.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 3)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டாடா ஏசி TN 57 BU 3252 வாகனத்திற்கு பழுது நீக்கும் பணிகள் மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் 09.05.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | லேபர் ஜார்ஜ் ரூபாய் | ஸ்பேர் பார்ட்ஸ் ரூபாய் | மொத்தம் ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | K.M.A.Motors, Byepass Road, Dindigul–624002. | ரூ.24,550 | ரூ.88,768 | ரூ.1,13,318 |
| 2. | Sri Vinayaga Auto Mobiles,Dindigul. | ரூ.28,100 | ரூ.96,090 | ரூ.1,24,190 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள K.M.A.Motors, Dindigul–2 நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.1,13,318/–ஐ (ரூபாய் ஒரு லட்சத்து பதிமூன்றாயிரத்து முன்னூற்றி பதினெட்டு மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.442/2022/எச்.1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **66, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.** 4)

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN 57 W 4937 டிப்பர் லாரிக்கு பழுது நீக்கும் பணிகள் மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் 09.05.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | லேபர் ஜார்ஜ் ரூபாய் | ஸ்பேர் பார்ட்ஸ் ரூபாய் | மொத்தம் ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | K.M.A.Motors, Byepass Road, Dindigul–624002. | ரூ.29,000 | ரூ.95,000 | ரூ.1,24,000 |
| 2. | Sri Vinayaga Auto Mobiles, Dindigul. | ரூ.35,100 | ரூ.1,08,300 | ரூ.1,43,400 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள K.M.A.Motors, Dindigul–2 நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.1,24,000/–ஐ (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி நான்காயிரம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **67, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.** 5)

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டாடா ஏசி TN 57 BU 3224 க்கு பழுது நீக்கும் பணிகள் மற்றும் இதரப் பணிகள் மேற்கொள்வதற்கு நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டு அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் 09.05.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | லேபர் ஜார்ஜ் ரூபாய் | ஸ்பேர் பார்ட்ஸ் ரூபாய் | மொத்தம் ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | K.M.A.Motors, Byepass Road, Dindigul–624002. | ரூ.24,550 | ரூ.88,768 | ரூ.1,13,318 |
| 2. | Sri Vinayaga Auto Mobiles,Dindigul. | ரூ.28,100 | ரூ.96,090 | ரூ.1,24,190 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள K.M.A.Motors, Dindigul–2 நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்குவதற்கும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.1,13,318/–ஐ (ரூபாய் ஒரு லட்சத்து பதிமூன்றாயிரத்து முன்னூற்றி பதினெட்டு மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **68, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 6)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு துப்புரவு பணி மேற்கொள்ள தேவைப்படும் நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளிச்சிங் பவுடர் 2022-2023ம் ஆண்டிற்கு கிருமி நாசினிகள் வாங்க ஆகும் செலவினத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் நகர்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு அதன் அடிப்படையில் 09.05.2022ம் தேதி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பொருட்கள் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் கண்ணா டிரேடர்ஸ் குரோம்பேட்டை, சென்னை | ஒப்பந்ததாரர் பெயர் P.K.ஏஜென்சிஸ், தஞ்சாவூர் |
|---|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்பு | கிலோ ஒன்றுக்கு ரூ.8.70 | கிலோ ஒன்றுக்கு ரூ.9.00 |
| 2. | பிளிச்சிங் பவுடர் | கிலோ ஒன்றுக்கு ரூ.39.20 | கிலோ ஒன்றுக்கு ரூ.42.00 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் கண்ணா டிரேடர்ஸ் குரோம்பேட்டை, சென்னை நிறுவனத்தார் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கண்ணா டிரேடர்ஸ் நிறுவனத்தார் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் பணி உத்தரவு வழங்குவதற்கும், அதற்காகும் செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசரம் அவசியம் கருதி கோடைகால சீசனை முன்னிட்டு பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **69, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 7)**

கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான குத்தகை இனங்களான, வாரச்சந்தை கட்டணம் வசூல் செய்யும் குத்தகைதாரர் பி.சந்திரசேகர் மற்றும் கோக்கர்ஸ்வாக் இயற்கை எழில்காட்சிகளை கண்டுகளிக்கும் குத்தகைதாரர் திரு.எம்.ரவி ஆகியோர் தங்களது குத்தகை காலத்தில் கொரோனா ஊரடங்கு காலத்தை கால நீட்டிப்பு அல்லது குத்தகைக்கான தொகையை தள்ளுபடி செய்யக் கோரி W.P(MD).No.2543 / 2021 மற்றும் W.P(MD).No.1726 / 2021 ன் மூலம் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் இந்நகராட்சிக்கு எதிராக வழங்கு தொடரப்பட்டு, வழக்கு மனுதாரருக்கு சாதகமாக முடிவடைந்த நிலையில் இந்நகராட்சியால் மேல்முறையிடு செய்யப்பட்டு அம்மனுவும் மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது. எனவே, மேற்கண்ட தீர்ப்பின் மீது

உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர வழக்கு கட்டணமாக ரூ.60,000/- செலுத்தக்கோரி உச்சநீதிமன்ற வழக்கறிஞர் திரு.சரத் சந்திரன் அவர்களால் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வழக்கு கட்டணம் ரூ.60,000/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.789/2018/அ3)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **70, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண்.** 8)

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி TN 57 AY 9358 ன் தகுதி சான்று பணிகள் மேற்கொள்வதற்கு **18.5.2022** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

1. M/s. ASR Body Works, Madurai — Rs. 149571.00
2. M/s. Santha Guru Motors, Madurai. — Rs. 156310.00

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

**1)** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. ASR Body Works, Madurai நிறுவனத்தின் மூலம் வாகனத்தின் தகுதி சான்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான தொகையினை வழஙகிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **71, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.** 9)

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் வருகின்ற 24.05.2022 முதல் 02.06.2022 வரை கோடைவிழா நடைபெறுவதினை முன்னிட்டு 19.05.2022 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரையண்ட் பூங்கா, பெண்டர்லாக் சாலை பிரிவு, ஜிம்கானா பிரிவு ஆகிய மூன்று இடங்களில் தற்காலிக நடமாடும் கழிப்பறைகள் அமைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் அடிப்படை தேவையினை கருத்தில் கொண்டு தனியார் நிறுவனம் மூலம் வாடகை அடிப்படையில் 12 எண்ணிக்கையிலான தற்காலிக கழிப்பறைகள் அமைத்திடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2.50 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு : 1) அனுமதிக்கலாம்.
2) பொது சுகாதார பிரிவின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் : | 72, நாள்.24.06.2022 |
|---|---|
| | |
| நகர்மன்றத் தீர்மானம் : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 10)**

கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான பிரையன்ட் பூங்கா, நகராட்சி தரைக் கடைகளுக்கு அருகில் உள்ள இடத்தில் திரு.S.A.மகேந்திரன் என்பவரால் நகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கடை அமைத்து உள்ளது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் W.P.(MD)No.7271 of 2022 மூலம் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கு இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.T.S.முகமதுமுகைதீன், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

வழக்கறிஞரின் 29.04.2022ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட வழக்கிற்கான கட்டணம் ரூ.15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)வழங்கக் கோரி கடிதம் அனுப்பி உள்ளார். மேற்கண்ட தொகையை வழக்கறிஞருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். (ந.க.எண்.372/2022/எப்.1)

| நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் : | 73, நாள்.24.06.2022 |
|---|---|
| | |
| நகர்மன்றத் தீர்மானம் : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 11)**

கொடைக்கானல் நகராட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்த அறிவிப்பினை கீழ்க்கண்ட நாளிதழ்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 30.04.2022 அன்று திண்டுக்கல் மாவட்ட வருகையினை விளம்பரமாக வெளியிட்ட வகையில் கீழ்க்கண்டவாறு பட்டியல் தொகை வழங்க நாளிதழ் நிறுவனங்களால் கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | நாளிதழின் பெயர் | பட்டியல் எண் | நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 1. | தினத்தந்தி<br>(The Daily Thanthi) | The Daily Thanthi Bill No.2223DGL231005678 | 30.04.2022 | 46777/- |
| 2. | தினமலர் | -- | 30.04.2022 | 37980/- |
| 3. | தினகரன்<br>(KAL PUBLICATIONS (P)LTD.,) | KAL PUBLICATIONS (P)LTD., Bill No.1300345175 | 30.04.2022 | 40714/- |
| 4. | மாலை மலர்<br>(Malar Publication Ltd.,) | DGL-D22040299 | 30.04.2022 | 13440/- |
| 5. | மாலை முரசு | AD22230201 | 30.04.2022 | 18900/- |
| 6. | மக்கள் முரசு<br>(Newsmen Associates Limited) | MDUMAB222300064 | 30.04.2022 | 42500/- |

வ.எண்.1 முதல் 6 வரை உள்ள மேற்கண்ட நாளிதழின் பட்டியலின்படி தொகையினை நாளிதழ் நிறுவனங்களுக்கு பொது நிதியின் மூலம் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **74, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 12)**

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கோடு கீழ்க்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டது. கொடைக்கானல் நகராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகளின் விபரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | கல்லுக்குழி திறந்த வெளி கிணறு, பில்டிங சொசைட்டி, சீனிவாசபுரம் தரைமட்ட தொட்டி, பியர்சோலா சாலை ஆகிய பகுதியில் பிரதான குழாய்களில் இணைப்பு வழஙகுதல் (Inter connection) | **5,83,564/–** |
| 2 | மேவில்லா, நாயுடுபுரம் தண்ணீர் தொட்டி, பில்டிங சொசைட்டி தரைமட்ட தொட்டி மற்றம் ரைபிள் ரேஞ்ச் பகுதியில் பிரதான குழாய்களில் இணைப்பு வழஙகுதல் (Inter connection) | **5,50,000/–** |

அலுவலக குறிப்பு. பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **75, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | பதிவு செய்யப்பட்டது. |

*******

**பொருள் எண். 13)**

கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.58, நாள்.29.04.2022ன்படி, இந்நகராட்சிக்கான விண்ணப்பங்கள் மற்றும் சேவைக் கட்டணங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் விலையுள்ள படிவங்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள் மறுநிர்ணயம் செய்ய பொது மக்களிடம் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை கோரிய விளம்பர அறிவிப்பு நாளிதழ்களில் வெளியிட்ட வகையில் Newsment Associates Limited பட்டியல் எண்.MDUMAB222300076. நாள்.8.05.2022ன் படி தொகை ரூ.9975/– மற்றும் தினசூரியன் பட்டியல் எண்.7073, நாள்.10.05.2022ன்படி தொகை ரூ.14784/– வழங்கக் கோரி பட்டியல்கள் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட விபரத்திற்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4413/2014/அ3)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **76, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 14**)

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் கல்வி நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்கள். 20 நாள். 29.04.2022 ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணிகளை மேற்கொள்வதற்கு 18.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | ஆனந்தகிரி நகராட்சி துவக்கப் பள்ளியின் வகுப்பறைகளை தரம் உயர்த்தும் பணி (Smart Class) | 9.00 | மெசர்ஸ். ஷர்சினி எண்டர்பிரைசர்ஸ், EVR நகர், T.V. கோவில், திருச்சி<br><br>மெசர்ஸ் . வாட்டர்கேர் சிஸ்டம்,22 எம்.ஜி. சாலை, கரூர் | 0.02% குறைவு<br><br>0.05% அதிகம் |
| 2 | ஆனந்தகிரி நகராட்சி துவக்கப் பள்ளியில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் | 5.60 | மெசர்ஸ். ஷர்சினி எண்டர்பிரைசர்ஸ், EVR நகர், T.V. கோவில், திருச்சி<br><br>மெசர்ஸ் . வாட்டர்கேர் சிஸ்டம்,22 எம்.ஜி. சாலை, கரூர் | 0.18% குறைவு<br><br>1.48% அதிகம் |
| 3 | அப்சர்வேட்டரி நகராட்சி துவக்கப் பள்ளியின் வகுப்பறைகளை தரம் உயர்த்தும் பணி (Smart Class) | 9.00 | மெசர்ஸ். ஷர்சினி எண்டர்பிரைசர்ஸ், EVR நகர், T.V. கோவில், திருச்சி<br><br>மெசர்ஸ் . வாட்டர்கேர் சிஸ்டம், 22 எம்.ஜி. சாலை, கரூர் | 0.02% குறைவு<br><br>0.05% அதிகம் |
| 4 | அப்சர்வேட்டரி நகராட்சி துவக்கப் பள்ளியில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல் | 5.60 | மெசர்ஸ். ஷர்சினி எண்டர்பிரைசர்ஸ், EVR நகர், T.V. கோவில், திருச்சி<br><br>மெசர்ஸ் . வாட்டர்கேர் சிஸ்டம், 22 எம்.ஜி. சாலை, கரூர் | 0.18% குறைவு<br><br>1.48% அதிகம் |
| 5 | ஆனந்தகிரி நகராட்சி பள்ளியில் சுற்று சுவர், கிரில் அமைத்தல், பெயிண்டிங மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 9.50 | அந்தோணி பெர்ணாண்டோ<br><br>ஜி. சிவக்குமார் | 0.08% குறைவு<br><br>1.50% அதிகம் |

அலுவலக குறிப்பு.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **77, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம்** : | ஏற்க்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 15**)

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் கொடைக்கானல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 59வது மலர்கண்காட்சி விழா நடைபெற இருப்பதால் (24.05.2022 மற்றும் 25.05.2022) இவ்விழாவிற்கு வெளியூர் மற்றும் உள்ளூரிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வருகைபுரிவதால் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி பிரையண்ட் பூங்கா, பெண்டர்லாக் சாலை பிரிவு, ஜிம்கானா பிரிவு ஆகிய மூன்று இடங்களில் 12 எண்ணிக்கையிலான தற்காலிக நடமாடும் கழிப்பறைகள் வாடகை அடிப்படையில் 10 தினங்களுக்கு தனியார் மூலம் தற்காலிகமாக நிறுவுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நகர்மன்றத்தில் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 24.05.2022ம் தேதி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ. எ | ஒப்பந்ததாரர்கள் | Rate per unit per days (Rs) | Transport Charges UP&Down | Total Amount Rs | GST 18% | Grand Total |
|---|---|---|---|---|---|---|
| 1. | SK SANITAZ,<br>Plot No.IV,<br>Royal Garden Annex,<br>Gopalasanallur,<br>Kattupakkam,<br>Chennai-600 056. | 1300/-<br>12 Toilets<br>10 days<br>Rs.156000/- | 54000/- | 210000/- | 37800/- | 247800/- |
| 2. | LEO Polymers Enterprises,<br>No.68/1, Shridi Sai Nagar,<br>3rd Street, Poonamallee,<br>Chennai-600 056. | 1450/-<br>12 Toilets<br>10 days<br>Rs.174000/- | 56000/- | 230000/- | 41400/- | 271400/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் SK SANITAZ, Kattupakkam, Chennai குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பொது சுகாதார நலன் கருதி, பணிகள் மேற்கொள்வதற்கும், பணி உத்தரவு வழங்குவதற்கும், அதற்காகும் செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் மற்றும் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **78, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 16**)

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் நகராட்சிக்கு சொந்தமான பிரகாசபுரத்தில் உள்ள உரக்கிடங்கில் தினசரி உற்பத்தியாகும் RDF கலவை பிளாஸ்டிக் கழிவுகள் 600 மெட்ரிக் டன் உள்ளது. இக்கழிவுகளை பொது சுகாதார நலன் கருதியும் அவசரம் அவசியம் கருதியும் உடனடியாக டால்மியா சிமெண்ட் தொழிற்சாலை அரியலூருக்கு வாகனத்தின் மூலம் ஏற்றி அனுப்ப ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 24.05.2022ம் தேதி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ எ | ஒப்பந்ததாரர்கள் | RDF Form Fresh Waste Processing Unit at Compost Yard | | |
|---|---|---|---|---|
| | | Unit | Quandity | Amount Rs |
| 1. | DM Solutions, SC, 3/1, Police Housing, Melakottaiyur, Chennai-600 127. | Load | 1 | 22000/- |
| 2 | Elumalaiyaan Recycling Management and Constructions, No.2/2, North Street, Ninnaiyur, Kallakurichi District, 606305 | Load | 1 | 25000/- |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் DM Solutions, Melakottaiyur, Chennai குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பொது சுகாதார நலன் கருதி, பணிகள் மேற்கொள்வதற்கும், பணி உத்தரவு வழங்குவதற்கும், அதற்காகும் செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் மற்றும் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **79, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண். 17)**

உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நில அளவை) திண்டுக்கல் அவர்களின் 31.1.2022ம் தேதிய ந.க.எண்.அ7/4059/2017 எண்ணிட்ட கடிதத்தில் 2014 முதல் 2017ம் ஆண்டு வரையிலான காலத்திற்கு நில அளவைக் கட்டணம் மற்றும் ஓய்வூதியம் செலுத்த தெரிவித்து கேட்பு கடிதம் வரப்பெற்றுள்ளது. கொடைக்கானல் நகராட்சியில் அயற்பணியில் பணிபுரிந்து வரும் நகர சார் ஆய்வாளர் மற்றும் நகரளவு உதவியாளர்களுக்கு 2014 முதல் 2017 முடிய உள்ள காலத்திற்கு நிலஅளவைக் கட்டணம் ரூ.11,43,024/- மற்றும் ஓய்வூதியம் ரூ.2,34,523/- ஆக மொத்தம் ரூ.13,77,547/-ஐ உரிய அரசு கணக்குத் தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் (ந.க.எண்.3036/2012/எப்.1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **80, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 18)**

மூலதன மானிய நிதி **2021-22-ன்** கீழ் ஏரிச்சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை மாநில அளவிலான தமிழ் நாளிதழில் மற்றும் ஒரு ஆஙகில நாளிதழில் இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை மூலம் அறிவிப்பு செய்த வகையில் நாளிதழ் கட்டணமாக கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை செலுத்த கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் விபரம் | விளம்பர நிறுவனத்தின் விபரம் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஏரிச்சாலையில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல். | Mcs Communications P ltd., Chennai<br>Times of India-14.5.22<br>Malai Murasu-14.5.2 | 603/PB/22-23 dated 24.5.2022 | 56763/– |

மேற்கண்ட தொகையினை நாளிதழ் நிறுவனத்திற்கு பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். (கோப்பு .ந.க.எண். 1963/2021/இ1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **81, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.** 19)

கொடைக்கானல் நகராட்சிக்குச் சொந்தமான சுங்கச்சாவடியில், ஒப்பந்த அடிப்படையில் (Contract Basis) பணியாற்றி வரும் ஓய்வு பெற்ற தமிழ்நாடு முன்னாள் படைவீரர்களக்கு 02/2021 முதல் 03/2022 வரை மொத்தம் 14 மாதங்களுக்கு வழங்க வேண்டிய தொகப்பூதியத் தொகை ரூ.8,34,324/– மற்றும் அகவிலைப்படி நிலுவைத் தொகை (01.01.2010 முதல் 31.03.2012 வரை மற்றும் 1.04.2014 முதல் 31.11.2014 வரை) ரூ.643662/– சேர்த்து மொத்தம் ரூ.14,77,986/– செலவினத்தை கொடைக்கானல் நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் , கொடைக்கானல் நகராட்சி சுங்க நிதியின் வரவு செலவினங்களுக்காக IFHRMS ல் புதிய கணக்கு தலைப்பு உருவாக்கிய பின்பு கொடைக்கானல் நகராட்சியின் பொது நிதிக்கு சுங்கநிதியிலிருந்து மீள பெற்றுக் கொள்ள திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.10201/2020/ஊ.வ.8(2), நாள்.26.05.2022ல் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பொது நிதியிலிருந்து சுங்கச்சாவடியில், ஒப்பந்த அடிப்படையில் (Contract Basis) பணியாற்றி வரும் ஓய்வு பெற்ற தமிழ்நாடு முன்னாள் படைவீரர்களுக்கு (TEXCO) நிறுவனத்திற்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1) அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

3) IFHRMS ல் சுங்கநிதிக்கு புதிய கணக்கு தலைப்பு உருவாக்கிய பின்பு பொது நிதிக்கு செலவீனத்தினை மீள பெற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எ.419/2003/அ3)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **82, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.** 20)

கொடைக்கானல் நகராட்சியில் **தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் (Day-NULM)-**ன் கீழ் 203 நடமாடும் கடைகள் (Vending Cart) அமைத்திட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள 18.05.2022 ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண். | சிப்பம் எண். | பணியின் விபரம் |
|---|---|---|
| 1 | I | காய்கறி மற்றும் பழக்கடை நடத்திட 76 எண்ணம் நடமாடும் கடைகள் தயார் செய்து ஒப்படைத்தல் |
| 2 | II | உணவு பொருட்கள் விற்பனை மற்றும் பூ வியாபாரம் செய்ய 127 எண்ணம் நடமாடும் கடைகள் தயார் செய்து ஒப்படைத்தல் |

**சிப்பம் எண். 1**

சிப்பம் எண்.1 ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டது.

1. M/s. Dhanshith Trading Agencies, T.S.No.21 East Chinthamani, Trichy
2. M/s. S.R. Enterprises,Thuraiyur

**சிப்பம் எண். 2**

சிப்பம் எண்.2 ல் ஆன்லைனில் 1 ஒப்பந்தப்புள்ளியும், ஒப்பந்த பெட்டியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டது.

1. Thiru. R. Madhusudhanan, New No. 488 Poonamallee High Road, Aminjikarai, Chennai. - On line
2. M/s.Dhanshith Trading Agencies, T.S.No.21 East Chinthamani, Trichy - Off Line
3. M/s. S.R. Enterprises,Thuraiyur - Off Line

மேற்கண்ட சிப்பம் எண்.1 மற்றும் 2 ல் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விவர உறையானது 27.05.2022 அன்று திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலை விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

| சிப்பம் எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடுவிகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| I | காய்கறி மற்றும் பழக்கடை நடத்திட 76 எண்ணம் நடமாடும் கடைகள் தயார் செய்து ஒப்படைத்தல் | 104.27 | M/s. Dhanshith Trading Agencies,T.S.No.21 East Chinthamani, Trichy.<br><br>M/s.S.R. Enterprises, Thuraiyur | 0.87% குறைவு<br><br>5.69% அதிகம் |
| II | உணவு பொருட்கள் விற்பனை மற்றும் பூ வியாபாரம் செய்ய 127 எண்ணம் நடமாடும் கடைகள் தயார் செய்து ஒப்படைத்தல் | 158.95 | Thiru. R. Madhusudhanan, New No. 488 Poonamallee High Road,Aminjikarai, Chennai.<br><br>M/s. Dhanshith Trading Agencies,T.S.No.21 East Chinthamani Trichy<br><br>M/s.S.R. Enterprises, Thuraiyur | தொழில்நுட்ப தகுதி இல்லை.<br><br>0.13% குறைவு<br><br>15.85% அதிகம் |

வரப்பெற்ற மேற்கண்ட பணிகளின் ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **83, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 21)**

கொடைக்கானல் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளுடன் வருபவர்கள் பாதுகாப்பாக தங்கி செல்லும் வகையில் சிறப்பு தங்குமிடம் (Special Shelter) ரூ.160.00 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NULM) திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்மறை கடிதம் ந.க.எண். 10072/2021/UPA-1 நாள். 18.04.2022 ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி இப்பணியினை மேற்கொள்வதற்கு 24.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1. திரு எம்.எம்.சலாமத், ஒப்பந்ததாரர், கொடைக்கானல்
2. திரு ஆர். தண்டபாணி, ஒப்பந்ததாரர் , கொடைக்கானல்.

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விவர உறையானது 27.05.2022 அன்று திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலை விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

| பணியின் விபரம் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடுவிகிதத்திற்கு) |
|---|---|---|---|
| 2 | 3 | 4 | 5 |
| வார்டு எண். 8, அரசு மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு தங்கும் விடுதி அமைத்தல் (Special Shelter) | 160.00 | 1. திரு எம்.என்.சலாமத் ஒப்பந்ததாரர்,<br>2. ஆர்.தண்டபாணி, ஒப்பந்ததாரர் | 4.84% அதிகம்<br>5.16% அதிகம் |

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர், திரு எம்.என்.சலாமத் அவர்கள் மதிப்பீட்டை விட 4.84% கூடுதலாக வழங்கியுள்ளார்.

எனவே, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு எம்.என்.சலாமத், ஒப்பந்ததாரர் அவர்களிடம் விலை குறைப்பு கோரி 27.05.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டதில் திரு.எம்.என்.சலாமத், நகராட்சி ஒப்பந்ததாரர் , கொடைக்கானல் அவர்களின் 30.05.2022 ம் தேதியிட்ட கடிதத்தில் தற்போதைய கட்டுமான பொருட்கள் விலை மற்றும் இதர விலைவாசி உயர்வு மற்றும் தொழிலாளர்கள் உள்ளூர் தினக்கூலி ஆகியவை அதிகமாக உள்ள காரணத்தால் மேலும் விலைக்குறைப்பு செய்து தர இயலாது என கடிதம் வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்ததாரர் திரு எம்.என்.சலாமத், நகராட்சி ஒப்பந்ததாரர், கொடைக்கானல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியான 4.84% மதிப்பீட்டைவிட கூடுதலாக பெற்ற தொகையுடன் இப்பணிக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள தொழிலாளர் நலநிதி 1% சரக்கு மற்றும் சேவை வரி 12% மற்றும் இதர எதிர்பாராத இனத்தினை மேற்கொள்ள தற்போதைய மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள தொகை ஆகியவற்றையும் சேர்த்து மதிப்பீட்டு தொகைக்குள்ளேயே பணி செய்து முடித்திட மன்றத்தின் அனுமதிக்கும், முடிவிற்கும்

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. இப்பணியானது அரசின் திட்டப்பணியாக உள்ளதால் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி எண்.2.7.2.ன்படி நகராட்சி நகர்மன்ற அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதால், குறைந்த ஒப்பந்த விகிதமாக 4. 84% மதிப்பீட்டைவிட கூடுதலாக குறிப்பிட்டுள்ள திரு எம்.என்.சலாமத், நகராட்சி ஒப்பந்ததாரர், எம்.எம்.தெரு, கொடைக்கானல் அவர்களின்ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

2. திட்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | 84, நாள்.24.06.2022 |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.** 22)

கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றத் தீர்மானங்கள் 26,31,33,35,36,37,38,39,40,48 மற்றும் 53 நாள். 29.04.2022 ன்படி பொது நிதியின் மூலம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதகு 31.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | 1-வது வார்டு செல்லபுரம் ஓம் சக்தி கோயில் முதல் ரோஜா பூங்கா வரை பழுதடைந்த சாலையில் சிமிண்ட் பேட்ஜ், மழை நீர் வாய்க்கால் மற்றும் சிறு பாலம் அமைத்தல் | 9.89 | எ.ஜீலியஸ் அலெக்சாண்டர்<br><br>பி. அரசகுமார் | 0.03 % குறைவு<br><br>0.66%அதிகம் |
| 2 | 2-வது வார்டு கீழ்பூமி நூன் ஸ்கூல் பள்ளி எதிர்புறம் சிறு பாலம் அமைத்தல் | 9.90 | என். ஜான்தாமஸ்<br><br>அந்தோணி பெர்ணாண்டோ | 0.06 % குறைவு<br><br>0.71%அதிகம் |
| 3 | 3-வது வார்டு புதுக்காடு பிரதான சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 6.00 | கே. சையது<br><br>பி. சுப்பிரமணி | 0.03 % குறைவு<br><br>1.08%அதிகம் |
| 4 | 4-வது வார்டு அம்பேத்கார் நகர் குறுக்கு சாலையில் படிக்கட்டுகள் அமைத்தல் | 9.82 | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை | |
| 5 | 6-வது வார்டு இசிசி சாலையில் தடுப்பணை முதல் கருப்பசாமி கோயில் வரை மழை நீர் வடிகால் அமைத்தல் | 6.00 | எஸ். மீனாட்சி சுந்தரம்<br><br>எம்.ஆர்.பிலால் இப்ராஉறிம், | 0.06 % குறைவு<br><br>0.23%அதிகம் |
| 6 | 8-வது வார்டு பகுதியில் முதலியார்புரம் 4வது தெரு 1-வது குறுக்கு தெருவில் சிமிண்ட் சாலை அமைத்தல் ( பெருமாள் கோயில் மேற்புறம்) | 9.87 | டி. ரஞ்சித்குமார்<br><br>பி. முரளி | 0.06 % குறைவு<br><br>0.23%அதிகம் |
| 7 | 9-வது வார்டு வி.ஜி.பி. சர்ச் அருகில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 9.79 | கே. சையது<br><br>பி. சுப்பிரமணி | 0.05 % குறைவு<br><br>0.20%அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | 10–வது வார்டு பேரிபால்ஸ் சாலையில் மழை நீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைத்தல் | 9.95 | அ.அருண்மணி<br><br>முகமது சாலிக் | 0.08 % குறைவு<br><br>0.89%அதிகம் |
| 9 | வார்டு எண். 11 அந்தோணியார் கோயில் 1வது குறுக்கு சாலையில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 9.70 | மெசர்ஸ். எஸ்.வி. இராணி தங்கம் கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br><br>ஆர். அங்கப்பன் | 0.13 % குறைவு<br><br>0.91%அதிகம் |
| 10 | வார்டு எண். 12 பிளிஸ்வில்லா 3 வது தெருவில் படிக்கட்டுகள் மற்றும் மழை நீர் வடிகால் அமைத்தல் | 9.86 | ஆர்.ராஜாமகேஷ்<br><br>அந்தோணிசாமி | 0.13 % குறைவு<br><br>0.88%அதிகம் |
| 11 | வார்டு எண். 13 வது வார்டு அன்னை தெரசா நகர் பிரதான சாலையில் மழை நீர் வடிகால் மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல் | 9.92 | ஜி. வசந்தகுமார்<br><br>டி. ரஞ்சித்குமார் | 0.12 % குறைவு<br><br>0.54%அதிகம் |
| 12 | வார்டு எண். 14 எம்.எம்.தெரு தடுப்பு சுவர் சிமிண்ட் சாலை அமைத்தல் | 9.90 | ஜி. வசந்தகுமார்<br><br>டி. ரஞ்சித்குமார் | 0.15 % குறைவு<br><br>0.48%அதிகம் |
| 13 | வார்டு எண். 15 அண்ணாநகரில் தடுப்பு சுவர் மற்றும் சிமிண்ட் சாலை அமைத்தல் | 9.70 | என். பழனிச்சாமி<br><br>முகமது சாலிக் | 0.59 % குறைவு<br><br>0.64%அதிகம் |
| 14 | வார்டு எண். 16 டர்னர்புரம் பகுதியில் தார்ச்சாலை , வேகத்தடை அமைத்தல் | 9.88 | பி. அரசகுமார்<br><br>ஜி. சிவக்குமார் | 0.18 % குறைவு<br><br>1.25%அதிகம் |
| 15 | வார்டு எண். 17 தந்திமேடு பகுதியில் மழை நீர் வடிகால் மற்றும் நடைபாதை சீரமைத்தல் | 10.00 | என்.முருகேஷ்வரி<br><br>எம். கென்னடி | 0.03 % குறைவு<br><br>0.74%அதிகம் |
| 16 | வார்டு எண். 18 ஆனந்தகிரி பகுதியில் மழை நீர் வடிகால் அமைத்தல் மற்றும் பயணியர் நிழற்குடை அமைத்தல் | 9.96 | மெசர்ஸ். எஸ்.வி. இராணி தங்கம் கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br><br>ஆர். அங்கப்பன் | 0.10% குறைவு<br><br>0.99%அதிகம் |
| 17 | வார்டு எண். 19 அண்ணாநகர் 4–வது தெருவில் சாலை சீரமைத்தல் மற்றும் கோழிப்பண்ணை பகுதியில் சாலையினை சீரமைத்தல் | 6.00 | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை | |
| 18 | வார்டு எண். 20 இந்திராநகர் பகுதியில் மழை நீர் வடிகால் சரி செய்தல் | 9.80 | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை | |
| 19 | வார்டு எண். 21 ஆனந்தகிரி பகுதியில் மழை நீர்வடிகால் மற்றும் சாலை சீரமைத்தல் | 9.95 | ஆர். தண்டபாணி<br><br>பி. அரசகுமார் | 0.17 % குறைவு<br><br>0.99%அதிகம் |
| 20 | வார்டு எண். 22 தைக்கால் பகுதியில் பாலம் மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல் | 9.87 | தமிழ்மணி<br><br>பி. அரசகுமார் | 0.17 % குறைவு<br><br>0.99%அதிகம் |
| 21 | வார்டு எண். 23 சீனிவாசபுரம் பகுதியில் தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் கழிப்பறை மராமத்து பணி செய்தல். | 9.79 | டி. ரஞ்சித்குமார்<br><br>பி. முரளி | 0.29 % குறைவு<br><br>0.70%அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | வார்டு எண். 24 செண்பகனூர் பகுதியில் சேதமடைந்த சாலைகளை சரிசெய்தல் | 9.92 | மெசர்ஸ். எஸ்.வி. இராணி தஙகம் கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br><br>ஆர். அஙகப்பன் | 0.12% குறைவு<br><br>0.99%அதிகம் |
| 23 | கொடைக்கானல் நகராட்சி காமராசர் சாலையில் சி.எஸ்.ஐ. தேவாலயம் அருகில் தாங்கு சுவர் அமைத்தல் | 5.00 | பி. சுப்பிரமணி<br><br>என். முருகேஷ்வரி | 0.78 % குறைவு<br><br>1.55 %அதிகம் |
| 24 | இந்திரா நகர் பகுதியில் முனியாண்டி வீடு அருகில் பாதுகாப்பு சுவர் மற்றும் சிமிண்ட் சாலை அமைத்தல் | 5.00 | அந்தோணி பெர்ணாண்டோ<br><br>ஜி. சிவக்குமார் | 0.04 % குறைவு<br><br>0.37%அதிகம் |
| 25 | கொடைக்கானல் நகராட்சி ஏரிச்சாலையினை சுற்றிலும் 7 இடங்களில் கனரக வாகனங்கள் செல்லாமல் தடுக்கும் வண்ணம் இரும்பு தடுப்பு அமைத்தல் | 5.20 | டி. கதிரேசன்<br><br>அந்தோணி பெர்ணாண்டோ | 0.25 % குறைவு<br><br>1.15 %அதிகம் |
| 26 | நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற தலைவர் அறை மற்றும் சட்டமன்ற உறுப்பினர் அறையினை மராமத்து செய்து புதுப்பித்தல் | 8.50 | பி. முரளி<br><br>எம்.ஆர்.பிலால் இப்ராஉறிம் | 0.05 % குறைவு<br><br>1.35 %அதிகம் |
| 27 | கவி தியாகராசர் சாலையில் உள்ள வாரச்சந்தையின் பொது கழிப்பறையினை மராமத்து செய்தல் | 1.00 | அந்தோணி பெர்ணாண்டோ<br><br>ஜி. சிவக்குமார் | 0.60 % குறைவு<br><br>1.84%அதிகம் |

அலுவலக குறிப்பு.

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2) ஒப்பந்தப்புள்ளி பெறப்படாத பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **85, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | வ.எண்.15ல் திரு.எம்.கென்னடி என்பதற்கு பதிலாக திரு.பி.சுப்பிரமணி என்ற திருத்தத்துடன் அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 23)**

சுவஜ் பாரத் மிஷன் (நகர்ப்புறம் ) 2.0 திட்டத்தின் கீழ் கொடைக்கானல் நகராட்சி பகுதியில் சமுதாய கழிப்பறை மற்றும் பொது கழிப்பறை அமைத்திட 31.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| சமுதாய கழிப்பறை | | | | |
| 1. | வார்டு எண். 17 மூஞ்சிக்கல் பகுதியில் சமுதாய கழிப்பறை அமைத்தல் | 24.00 | ஆர். தண்டபாணி<br><br>பி. அரசகுமார் | 4.70 %அதிகம்<br><br>5.93 %அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | வார்டு எண். 16 டர்னார்புரம் பகுதியில் சுகாதார பணியாளர்கள் குடியிருப்பு அருகில் சமுதாய கழிப்பறை அமைத்தல் | 24.00 | டி.கதிரேசன்,<br><br>அந்தோணி பெர்ணாண்டோ | 4.76 %அதிகம்<br><br>5.60 %அதிகம் |
| பொது கழிப்பறை | | | | |
| 3. | ஏரிச்சாலையில் மீனாட்சி பங்களா அருகில் பொது கழிப்பறை அமைத்தல் | 35.00 | பி. முரளி<br><br>எம்.ஆர்.பிலால் இப்ராஉறிம் | 4.96 %அதிகம்<br><br>5.70 %அதிகம் |
| 4. | பிரையண்ட் பூஙகா அருகில் பொது கழிப்பறை அமைத்தல் | 35.00 | ஆர். தண்டபாணி<br><br>பி. அரசகுமார் | 4.70 %அதிகம்<br><br>5.69 %அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு விலைகுறைப்பு கடிதம் கோரப்பட்டதில் கட்டுமானப் பொருட்கள் விலை உயர்வு மற்றும் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு காரணமாக விலை குறைப்பு கடிதம் வழஙக இயலாது என தெரிவித்துள்ளார். எனவே, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம். மதிப்பீடு தொகைக்குள் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **86, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 24)**

கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றத் தீர்மானஙகள் 6, 8 மற்றும் 10 நாள். 11.04.2022 ன்படி பொது நிதியின் மூலம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு 29.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட் சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | அண்ணாசாலை தினசரி மார்க்கெட்டில் உள்ள கடைகளை காலி செய்து மாற்று இடமாக போஸ்ட் ஆபிஸ் அருகில் தற்காலிக கடை அமைத்தல் | 9.95 | டி. கதிரேசன்<br><br>அந்தோணி பெர்ணான்டோ | 0.08 % குறைவு<br><br>3.21 %அதிகம் |
| 2 | அண்ணாசாலை தினசரி மார்க்கெட்டில் உள்ள கடைகளை காலி செய்து மாற்று இடமாக வேலி வியு எதிர்புறம் தற்காலிக கடை அமைத்தல் | 9.90 | டி. கதிரேசன்<br><br>அந்தோணி பெர்ணான்டோ | 0.08 % குறைவு<br><br>3.21 %அதிகம் |
| 3 | அண்ணாசாலை தினசரி மார்க்கெட்டில் உள்ள கடைகளை காலி செய்து மாற்று இடமாக போஸ்ட் ஆபிஸ் சாலை கழிப்பறை முதல் ஏ.எம்.எஸ். பிராய்லர் வரை தற்காலிக கடை அமைத்தல் | 9.70 | டி. கதிரேசன்<br><br>அந்தோணி பெர்ணான்டோ | 0.08 % குறைவு<br><br>3.21 %அதிகம் |
| 4 | அண்ணாசாலையில் உள்ள தினசரி மார்க்கெட் கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துதல் | 9.90 | பி. அரசகுமார்<br><br>ஜி. சிவக்குமார் | 0.26 % குறைவு<br><br>0.82%அதிகம் |
| 5 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 2 மற்றும் ஏரியினை சுற்றியுள்ள பொது கழிப்பறை மராமத்து செய்தல் | 9.95 | எம். அந்தோணிசாமி<br><br>எம். கென்னடி | 0.33 % குறைவு<br><br>1.03%அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 6 மற்றும் 17ல் உள்ள பொது கழிப்பறைகளை மராமத்து செய்தல் | 9.80 | எம். அந்தோணிசாமி<br><br>எம். கென்னடி | 0.33 % குறைவு<br><br>1.04%அதிகம் |
| 7 | கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 21 மற்றும் 24 ல் உள்ள பொது கழிப்பறைகளை மராமத்து செய்தல் | 9.90 | தமிழ்மணி<br><br>ஜி. சிவக்குமார் | 0.33 % குறைவு<br><br>1.03%அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பபந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **87, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | ஏற்க்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 25)**

கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.45, நாள்.29.04.2022ன்படி, இந்நகராட்சிக்கான திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள்–2016, திருந்திய வரைவு திடக்கழிவு உபயோகிப்பாளர் கட்டணம் நிர்ணயம் செய்ய பொது மக்களிடம் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை கோரிய விளம்பர அறிவிப்பு நாளிழில் வெளியிட்ட வகையில் தமிழ்சுடர், Bill No: A//ADVT//MAY 2022//23. நாள்.10.05.2022ன்படி தொகை ரூ.18,900/– வழங்கக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட விபரத்திற்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.885/2017/எச்.1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **88, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 26)**

கொடைக்கானல் நகராட்சியின் 2022 வருடத்திய கோடை விழா 2022 யை முன்னிட்டு நகருக்கு வருகை தரும் அமைச்சர்கள் மற்றும் அரசு அலுவலர்களை வரவேற்று நாளிதழில்களில் விளம்பரமாக வழஙகிட திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதன்படி வளர்ச்சி பணிகள் குறித்த விபரத்தினை கீழ்க்கண்ட நாளிதழ்களில் விளம்பரமாக வெளியிட்டவகையில் கீழ்க்கண்டவாறு பட்டியல் தொகை வழஙக நாளிதழ் நிறுவனஙகளால் கோரப்பட்டுள்ளது.

| வ.எண். | நாளிதழின் பெயர் | பட்டியல் எண் | நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | மாலை மலர் | DGL-D22050184 | 24.05.2022 | 13440/– |
| 2 | தினகரன் | KAL PUBLICATIONS(P)LTD.,<br>Bill No. 3300351426 | 24.05.2022 | 40713/– |
| 3 | மாலை முரசு | AD22230382 | 29.05.2022 | 20948/– |
| 4 | தினமணி | Express publications (m) p ltd.,<br>MDUTN30076907 | 24.05.2022 | 40000/– |
| 5 | மக்கள் குரல் | Newsmen Associates Ltd.,<br>Bill No: CHEMA b222301242 | 30.05.2022 | 20500/– |
| 6 | தினத்தந்தி | The Daily Thanthi<br>2223DGL231006344 | 24.05.2022 | 46777/– |
| 7 | தினமலர் | ---- | 24.05.2022 | 38288/– |

மேற்கண்ட நாளிதழின் பட்டியலின்படி தொகையினை நாளிதழ் நிறுவனங்களுக்கு பொது நிதியின் மூலம் தொகை வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **89, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.** 27)

கொடைக்கானல் நகராட்சியில் விண்ணப்பங்கள் மற்றும் சேவைக் கட்டணங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் விலையுள்ள படிவங்களின் விலை மற்றும் சேவைக் கட்டணங்கள் நிர்வாக நலன் கருதி 01.07.2022 முதல் மறு நிர்ணயம் செய்ய நகர்மன்றத் தீர்மானம் எண்.58, 29.4.2022ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விபரம் பொதுமக்களின் தகவலுக்காக 8.05.2022 ல் மக்கள் குரல் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு ஆட்சேபனை ஏதும் இருப்பின் 30 நாட்களுக்குள் தக்க காரணங்களுடன் எழுத்து பூர்வமாக வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட சேவைக் கட்டணங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் விலையுள்ள படிவங்களின் விலை மற்றும் சேவைக் கட்டணங்கள் மறு நிர்ணயம் செய்வது தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் வரப்படவில்லை, எனவே மறு நிர்ணய கட்டண விபரத்தினை இறுதி செய்யவும், அதனை அரசிதழில் சிறப்பு வெளியிடாக விளம்பரம் செய்யவும் அதற்கான செலவு தொகையினை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது,

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம் (ந,எண். 4413/2014/அ3)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **90, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.** 28)

தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் 2021–22 (NULM)ன் கீழ் அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளுடன் வருபவர்கள் பாதுகாப்பாக தங்கி செல்லும் வகையில் தங்குமிடம் (Special Shelter) அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பினை மாநில அளவிலான தமிழ் நாளிதழில் மற்றும் அகில இந்திய அளவில் ஒரு ஆங்கில நாளிதழில் இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை மூலம் அறிவிப்பு செய்த வகையில் நாளிதழ் கட்டணமாக கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை செலுத்த கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | விளம்பர நிறுவனத்தின் விபரம் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகளுடன் வருபவர்கள் பாதுகாப்பாக தங்கி செல்லும் வகையில் தங்குமிடம் (Special Shelter) அமைத்தல். | Mcs Communications Private Limited, Chennai.<br><br>1.Times of India–15.5.22<br>2. Murasoli–15.5.22 | 604/PB/22–23 dated:24.5.2022 | 83,538/– |

மேற்கண்ட தொகையினை நாளிதழ் நிறுவனத்திற்கு பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் (கோப்பு ந.க.எண்.1808/2021/இ1)

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **91, நாள்.24.06.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.** 29)

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு துப்புரவுப் பணிக்கு தேவைப்படும் தளவாடச் சாமான்கள் வாங்கிக் கொள்வதற்கு மன்றத்தின்அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| வ. எண் | தளவாடச் சாமான்கள் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் கண்ணா டிரேடர்ஸ், குரோம் பேட்டை, சென்னை. | ஒப்பந்ததாரர் பெயர் P.K.ஏஜென்சிஸ், No.5/84–1, களத்தூர் கிழக்கு, களத்தூர் (PO), தஞ்சாவூர். |
|---|---|---|---|
| 1. | மண்வெட்டி(பிடியுடன்) | ரூ.475 | ரூ.575 |
| 2. | சாக்கடை அள்ளும் வரட்டி | ரூ.384 | ரூ.434 |
| 3. | கடப்பாரை | ரூ.975 | ரூ.1015 |
| 4. | கை அரிவாள் (உருக்கு) | ரூ.450 | ரூ.490 |
| 5. | வீச்சு அரிவாள் (உருக்கு) | ரூ.450 | ரூ.490 |
| 6. | கையோடு | ரூ.115 | ரூ.145 |
| 7. | சுத்தியல் | ரூ.350 | ரூ.405 |
| 8. | 3 பல் முள் கம்பி | ரூ.490 | ரூ.535 |
| 9. | 5 பல் முள் கம்பி | ரூ.490 | ரூ.535 |
| 10. | பிரம்புக் கூடை | ரூ.450 | ரூ.505 |
| 11. | துடைப்பம் | ரூ.30 | ரூ.55 |
| 12. | புல் அரிவாள் | ரூ.115 | ரூ.170 |
| 13. | குப்பையை மூடிக் கொள்ளும் வலை | ரூ.3500 | ரூ.3750 |
| 14. | இரும்பு வாளி | ரூ.325 | ரூ.365 |
| 15. | டாய்லட் பிரஸ் | ரூ.295 | ரூ.335 |
| 16. | ரோட்டில் மண் அகற்றும் பிரஸ் (கைப்பிடியுடன்) | ரூ.325 | ரூ.345 |
| 17. | பத்து பல் முள் கம்பி | ரூ.550 | ரூ.590 |
| 18. | இரும்பு சட்டி | ரூ.275 | ரூ.310 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் கண்ணா டிரேடர்ஸ், குரோம் பேட்டை, சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்குவதற்கும் அதற்காகும் செலவுத் தொகை ரூ.8,00,000/–ஐ (ரூபாய் எட்டு லட்சம் மட்டும்) நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **92, நாள்.24.06.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 30)**

கொடைக்கானல் நகராட்சியில் தினசரி நகர் பகுதியில் 17 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. உருவாகும் திடக்கழிவுகளை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் தினசரி சேகரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை நகராட்சி துய்மை பணியாளர்களை கொண்டு மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்தெடுக்கப்படுகிறது. தற்போது தூய்மை இந்தியா திட்டம் 2015–ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி ரூ.110.00 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவுகளை உரமாக்கிட இயந்திரங்கள் பொருத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

உரக்கிடங்கில் சேகரிக்கப்பட்டுள்ள திடக்கழிவுகளை ஏற்கனவே பொருத்தப்பட்ட இயந்திரங்களை கொண்டு பயனுள்ள பொருட்களாக மாற்றி பயன்படுத்திடவும், சேகரித்து வைக்கப்பட்டுள்ள திடக்கழிவுகளின் அளவினை குறைத்திடவும், (Processing daily fresh mixed municipal solid waste and converts into final useful products with residue with minimize land fill at the end of the process) நகராட்சியில் போதுமான தூய்மை பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் திடக்கழிவு மேலாண்மையில் திடக்கழிவு மேலாண்மையினை கையாள இயலாத சூழ்நிலை உள்ளது.

எனவே நகராட்சி உரக்கிடங்கில் திடக்கழிவு மோலண்மை பணியினை கையாள மற்றும் கையாள முடியாத கழிவுகளை முறையாக செயலாக்கம் செய்து அப்புறப்படுத்துதல் பணிக்காக DM SOLUSION CHENNAI தனியார் நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வரும் சூழலில் பணிக்காலம் ஜூலை–2022 உடன் முடிவதால் மேற்கண்ட புதிய ஒப்பந்தப்புள்ளி கோர மதிப்பீடு தயார் செய்யப்பட்டு உள்ளது. அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.75.00 லட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது,

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அமைத்திக்கலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி வெளியீட்டிற்கான செலவீனத்தினையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.154/2021/எச்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **93, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 31)**

தமிநாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 157 மற்றும் 306ன்படி அறிவிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் நகராட்சியில் சுற்றுச் சூழல் பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதார சீர்கேடு ஏற்படுவதைத் தடுக்கவும் ஒப்பந்தப் புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள போர்கால அடிப்படையில் பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அவசரம் அவசியம் கருதி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வெள்ளிநீர் வீழ்ச்சி நுழைவுப் பகுதியில் பிளாஸ்டிக் ஒழிப்பு பணியினை தீவிரப்படுத்துவதற்கு GESM Environment Service, Chennai நிறுவனத்தின் மூலம் கூடுதலாக 6 துப்புரவுப் பணியாளர்களை நியமித்துக் கொள்வதற்கு (01.01.2022 முதல் 30.06.2022 வரை) 6 மாத காலத்திற்கு மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1203, நாள்.31.12.2021–ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

தற்போது அரசின் கொள்கைப்படி, அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் ஒரே மாதிரியான பொது விலை விகிதத்தில் தூய்மை பணியாளர்களை நியமனம் செய்ய அறிவுறுத்தியதன் பேரில் கொடைக்கானல் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ந.க.எண்.3140/2016/எச்.1, நாள்.16.08.2021–ன்படி கருத்துரு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதிபெறவேண்டி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இது நாள் வரை நிர்வாக அனுமதி பெறப்படாத நிலையில் மேற்கண்ட நிறுவனத்தின் பணிக்காலம் 30.06.2022 உடன் முடிவடைவதால் மேற்கண்ட நகராட்சி ஆணையாளர் உத்தரவு மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதே விலை விகிதத்தில் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள அனுமதி வேண்டி GESM Environment Service, Chennai நிறுவனத்தார் மூலம் கடிதம் வரப்பட்டுள்ளதை தொடர்ந்து பொது சுகாதாரத்தின் அவசியம் கருதியும் நிர்வாக அனுமதி பெறப்படும் காலம் வரை டெண்டர் கோரி பணியினை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளதாலும், GESM Environment Service, Chennai என்ற நிறுவனத்திற்கு பணிகால நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குவதற்கும் அதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – 6 தூய்மைப் பணியாளர்களை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கி பணி தொடங்கும் காலம் வரை பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி GESM Environment Service, Chennai நிறுவனத்திற்கு பணிகால நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.215/2020/எச்.1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **94, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண்.** 32)

## திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் –2016
## திருந்திய வரைவு திடக்கழிவு உபயோகிப்பாளர் கட்டணம் நிர்ணய விவரம்

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)–இல் பிரிவு 3, 6 மற்றும் 25–களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம்பிரித்தல், எடுத்துச் செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–இன் விதி 4–இல் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த நகராட்சி நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து கழிவுகளை கண்ட இடங்களில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம் பிரித்து நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் VIII பிரிவு 153, 156, 157, 158, 160 மற்றும் 161–ன்படி, நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய ஏற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொது சுகாதாரம் பேணி சுற்றுச் சூழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து பணம்

வசூலித்து செயல்படுத்தவும் நச்சுத் தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய கழிவுகளையோ, மலக்கழிவுகளையோ, மருத்துவக் கழிவுகளையோ மாற்றம் செய்தல் சாலைகளில் போடுதல் மற்றும் கழிவு நீர்க் கால்வாய்களில் கொட்டுதல் ஆகியவை தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

மேற்காணும் சட்ட விதிமுறைகளுக்குட்பட்ட, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், வடிகால்வாய் தங்கு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் கையாளுதல் விதிகள் 2016–ன்படி நகர்மன்ற ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கு தனி நபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை திட்டம் கையாளுதல் கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின் படி, நடவடிக்கை எடுக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2017 ஜீலை 7ஆம் தேதி (உள்ளாட்சித்துறை அறிவிக்கை ந.க.எண்.11022/2017/ஜி2, நாள்.28.06.2017) திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீட்டில் உபயோகிப்பாளர் கட்டணம் மற்றும் அபராத நிர்ணயம் விபரம் வெளியிடப்பட்டதில், அட்டவணை–I இல் வரிசை எண்.1 இல் உள்ள குடியிருப்புகளுக்கான உபயோகிப்பாளர் கட்டணம் நிர்ணயித்ததில் எந்தவித மாற்றமும் இல்லை. அட்டவணை –1ல் 2, 3 மற்றும் 4ல் நிறுவனங்கள் மற்றும் வணிக இனங்களில் அளவுகளுடன் கூடிய உட்பிரிவுகள் மற்றும் பல வணிக இனங்களில் கட்டணம் நிர்ணயிக்காத காரணத்தாலும், இந்நகராட்சிக்கு பொதுமக்களிடமிருந்தும் பல சங்க அமைப்புகளிலிருந்தும் நிறைய புகார்கள் வந்துள்ளன.

வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் வணிக இனங்களில் அளவுகளுடன் கூடிய உட்பிரிவுகள் சேர்க்கப்பட்டும், திருத்தப்பட்டும் இதுவரை கட்டணம் நிர்ணயிக்கப்படாத வணிக இனங்களுக்கும் கட்டணம் நிர்ணயம் செய்ய நகர்மன்ற தீர்மான எண்–45, நாள்.29.04.2022–ன் படி நகர்மன்றம் அனுமதி பெறப்பட்டது. அதன்படி, திருந்திய வரைவு திடக்கழிவு உபயோக்கிப்பாளர் கட்டணம் நிர்ணய விபரம் பொதுமக்களின் ஆட்சேபனை பெறும் பொருட்டு 10.05.2022ல் தமிழ் சுடர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு ஆட்சேபனை ஏதும் இருப்பின் 30 நாட்களுக்குள் தக்க காரணங்களுடன் எழுத்து பூர்வமாக வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்கண்ட அறிவிப்பின்படி திருந்திய வரைவு திடக்கழிவு உபயோகிப்பாளர் கட்டணம் நிர்ணயம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் வரப்படவில்லை. எனவே மேற்கண்ட திருந்திய வரைவு திடக்கழிவு உபயோகிப்பாளர் கட்டணம் நிர்ணயம் செய்வதற்கு நகர்மன்றத்தின் இறுதி ஒப்புதல் பெற மன்றதின் அனுமதி வேண்டப்படுகிறது,

அலுவலக குறிப்பு , 1) மன்றம் அனுமதிக்கலாம்
2) நகர்மன்றத்தின் இறுதி ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெற அனுப்பலாம்.
3) திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடாக வெளியிட ஆகும் செலவுத் தொகையையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.885/2017/எச்.1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **95, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 33)**

கொடைக்கானல் நகராட்சி 2022–2023ம் ஆண்டிற்கான எழுது பொருட்கள் கொள்முதல் செய்து அலுவலக இருப்பில் வைக்கப்பட வேண்டியுள்ளது. எழுது பொருட்களின் தேவைப் பட்டியல் காணும் விபரத்திற்கு உரிய எழுது பொருட்களை அரசாணை நிலை எண்.330, தொழில் துறை, நாள்.03.05.1991ன்படி விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் நேரடியாக மாவட்ட அச்சக சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனங்களில் கொள்முதல் செய்து கொள்ள அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை நகராட்சி நிர்வாக இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் கடிதம் C.No.29968/2012/OP3, நாள்.30.12.2013ன்படி நகராட்சிக்குத் தேவையான அனைத்து விதமான பொருட்களையும் அரசு கூட்டுறவு நிறுவனங்களில் கொள்முதல் செய்து கொள்ள பரிந்துரை செய்துள்ளார்கள்.

மேற்காணும், அனுமதிக்கிணங்க 2022–2023ம் ஆண்டிற்கான காகிதங்கள், கணினி அச்சு இயந்திரங்களுக்கு தேவையான டோனர்கள், பதிவேடுகள், கோப்பு மூடுதாள்கள், அளவு புத்தகங்கள் உள்ளிட்ட பொருட்கள் இவ்வருடத்திற்கு இதுவரை வாங்கப்படவில்லை. இப்பொருட்களுக்கான இருப்பும் இல்லை. எனவே, தேவையான எழுதுபொருட்களை மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனங்களிலிருந்து கொள்முதல் செய்து கொள்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : இந்நகராட்சிக்குத் தேவையான பொருட்கள் கொள்முதல் செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.979/2021/பி3)

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **96, நாள்.24.06.2022** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 34)**

கொடைக்கானல் நகராட்சி குத்தகைதாரர்களால் கொரோனா ஊரடங்கு காலத்திற்கு குத்தகை காலத்தை கால நீட்டிப்பு செய்துதரக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட கீழ்க்கண்ட வழக்குகள் இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.லூர்து பவுல் மவுரியா, அவர்களால் இந்நகராட்சி சார்பாக ஆஜராகி நடத்தப்பட்டு வருகிறது.

| வ.எண் | குத்தகைதார் பெயர் | குத்தகை விபரம் | வழக்கு எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.R.பிலேந்திரன் | புரூட்டன் வளாக கட்டண கழிப்பறை | W.P.No.23019/2021 | 15,000/– |
| 2 | திரு.J.தனராஜ் | புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பறை | W.P.No.23028/2021 | 15,000/– |
| 3 | திரு.M.ரவி | புரூட்டன் வளாக வாகன நிறுத்த கட்டணம் | W.P.No.23034/2021 | 15,000/– |
| 4 | திரு.P.சுரேஷ் | பிரையண்ட் பூங்கா எதிர்புறமுள்ள வாகன நிறுத்த கட்டணம் | W.P.No.23050/2021 | 15,000/– |

மேற்கண்ட விவரப்படியான வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணம் செலுத்தக் கோரி வழக்கறிஞர் திரு.லூர்து பவுல் மவுரியா அவர்களால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட விபரப்படியான 4 வழக்குகளுக்கு தொகை ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது,

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். (ந,எண். 6730/2016/அ3)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **97, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 35)**

கொடைக்கானல் நகராட்சியில் மூலதன மானிய நிதி **2021–22** ன் கீழ் ரூ.**580.00** இலட்சம் மதிப்பீட்டில் Construction of New Boat Hosue and Eco Bio-Block EBSNC20107 Nano water clarifier at lake (Package - III) பணியினை மேற்கொள்வதற்கு **01.06.2022** அன்று கீழ்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று தொழில்நுட்ப தகுதிக்கான ஒப்பந்த உறைகள் மட்டும் திறக்கப்பட்டது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர் / முகவரி** |
|---|---|
| 1 | திரு. என். கருப்பசாமி, அரசு ஒப்பந்ததாரர், பழனி |
| 2 | திரு பி. அரசகுமார், நகராட்சி ஒப்பந்ததாரர், கொடைக்கானல். |

பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளும் இந்நகராட்சி ஒப்பந்த கூர்ந்தாய்வு குழுவால் தொழில்நுட்ப தகுதி வாய்ந்தவைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் **07.06.2022** தேதியன்று விலைவிகிதங்களுக்கான ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர் / முகவரி** | **ஒப்பந்தத் தொகை ரூ** | **ஒப்பந்த விலை விகிதம்** |
|---|---|---|---|
| 1 | திரு. என். கருப்பசாமி, அரசு ஒப்பந்ததாரர், பழனி | ரூ. **5,25,75,254/–** | 4.97 % அதிகம் |
| 2 | திரு பி. அரசகுமார், நகராட்சி ஒப்பந்ததாரர், கொடைக்கானல். | ரூ.**5,40,87,330/–** | 7.99% அதிகம் |

எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர், திரு. என். கருப்பசாமி, அரசு ஒப்பந்ததாரர், பழனி அவர்கள் மதிப்பீட்டை விட 4.97% கூடுதலாக வழஙகியுள்ளார்.

எனவே, மேற்படி ஒப்பந்ததாரர் திரு. என். கருப்பசாமி, அரசு ஒப்பந்ததாரர், பழனி அவர்களிடம் விலை குறைப்பு கோரி **08.06.2022** அன்று கடிதம் அனுப்பப்பட்டதில் திரு. என். கருப்பசாமி, அரசு ஒப்பந்ததாரர், பழனி அவர்களின் **10.06.2022** ம் தேதியிட்ட கடிதத்தில் தற்போதைய கட்டுமான பொருட்கள் விலை மற்றும் இதர விலைவாசி உயர்வு மற்றும் தொழிலாளர்கள் உள்ளூர் தினக்கூலி ஆகியவை அதிகமாக உள்ள காரணத்தால் மேலும் விலைக்குறைப்பு செய்து தர இயலாது என கடிதம் வழங்கியுள்ளார். மேற்படி திரு. என். கருப்பசாமி, அரசு ஒப்பந்ததாரர், பழனி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகையில் **4.97%** மதிப்பீட்டைவிட கூடுதலாக பெற்ற தொகையுடன் இப்பணிக்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள தொழிலாளர் நலநிதி **1** % சரக்கு மற்றும் சேவை வரி **12%** மற்றும் இதர எதிர்பாராத இனத்தினை மேற்கொள்ள தற்போதைய மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ள தொகை ஆகியவற்றையும் சேர்த்து பணி மேற்கொள்ள ஒப்புநோக்கு பட்டியல் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள ஒப்பு நோக்கு மன்றத்தின் அனுமதிக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. இப்பணியானது அரசின் திட்டப்பணியாக உள்ளதால் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி எண்.2.7.2.ன்படி நகராட்சி நகர்மன்ற அதிகார வரம்பிற்குட்பட்டுள்ளதால், குறைந்த ஒப்பந்த விகிதமாக 4.97% மதிப்பீட்டைவிட கூடுதலாக பெறப்பட்ட திரு. என். கருப்பசாமி, அரசு ஒப்பந்ததாரர், பழனி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். பணியினை மதிப்பீட்டிற்குள்ளேயே மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்ட பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கிட நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **98, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண். 36)**

திருமதி எஸ்.தனலட்சுமி கிருஷ்ணன் க/பெ.சூரியா, மதுரை என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD)NO.11120 of 2022 மூலம் ஏரியை சுற்றி E-மோட்டார் சைக்கிள்கள் விடுவது தொடர்பாக அனுமதி கோரி நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்து அதில் ஆணையாளரை 3ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார். அதற்கான நீதிமன்ற எதிர் மனுதாரரால் தொடரப்பட்ட வாதுரை நகல் வரப்பெற்றதன் பேரில், வழக்கிற்கான எதிர் வாதுரை மற்றும் வக்காலத்துப்படிவம் தயார் செய்து நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தி நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெற்றுத்தர தெரிவித்து, இந்நகராட்சி சென்னை உயர்நீதி மன்ற மதுரைகிளை நிலை வழக்கறிஞர் திரு.T.S. முகமது முகைதீன் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்கு வழக்கறிஞரால் நகராட்சி சார்பாக ஆஜராகி நடத்தப்பட்டு வருகிறது. வழக்கறிஞரின் 20.6.2022ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட வழக்கிற்கான வழக்கு கட்டணம் ரூ.15,000/-(பதினைந்தாயிரம் மட்டும்) வழங்க கோரி கடிதம் வரப்பட்டுள்ளது.

இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். (கோப்பு எண்.701/2022.எப்1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **99, நாள்.24.06.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/-பா.செல்லத்துரை,
**நகர்மன்றத் தலைவர்,**
**கொடைக்கானல் நகராட்சி.**

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.